இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 07-07-2025

# இலங்கை அரசிடம் இந்திய அரசு பேச வேண்டும்!

கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம் என்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத் திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கிறார். இந்திய மீனவர்கள் மீது அவதூறான கருத்துகளை ஆணவமாகத் தெரிவித்து இருக்கிறார்.

“கச்சத்தீவு கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காக இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றனர். அவர்கள் மீன் வளங்களைக் கொள்ளையடிப்பதோடு கடல் தாவரங்களையும் கடுமையாக சேதப்படுத்துகின்றனர். இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்து சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு இந்திய அரசும் ஆதரவளிக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம். இந்தப் பிரச்சினைக்கு தூதகர ரீதியில் தீர்வு காண இலங்கை தயாராக உள்ளது. சர்வதேச சட்டங்களின் படி நிறுவப்பட்ட கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம். இந்தியாவில் காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அரசியல் காரணங்களுக்காகவே கச்சத்தீவு விவகாரத்தை எழுப்புகின்றன” என்று வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி இருக்கிறார் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத்.

கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும் என்பதை அரசியல் காரணங்களுக்காக எழுப்பவில்லை. இந்திய மீனவர்களின் வாழ்வுரிமையின் அடிப்படையில்தான் எழுப்புகிறோம். கடல் தாண்டி வந்ததாகச் சொல்லி இந்திய மீனவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதையும், படகுகளை பறிமுதல் செய்வதையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு லட்சக்கணக்கில் அபராதம் போடுவதையும் இலங்கை அரசு தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. கைது செய்வதும், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசானது இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதும், இந்திய அரசு உடனடியாக இலங்கை அரசுக்கு கோரிக்கை விடுப்பதும் தொடர்ந்து நடக்கிறது. ஆனாலும் கைது நடவடிக்கையை இலங்கை நிறுத்தவில்லை.

**இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையவில்லை. இலங்கையின் மீன் வளங்களை கொள்ளையடிப்பது இல்லை. இந்திய மீனவர்கள் வைத்திருக்கும் மீன்கள்தான் சிங்கள கடற்படையால் பறிக்கப்படுகிறது. மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுகிறது. நமது மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதன் உச்சமாகச் சிலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். பலர் கைதாகி கொண்டு செல்லப்படுகிறார்கள். இவை அனைத்தும் ரகசியமாக நடப்பவை அல்ல. வெளிப்படையாகத்தான் நடக்கிறது. இதனை தமிழ்நாடு அரசு கண்டிப்பதைப் போல, இந்திய அரசு முதலில் கடுமையாகக் கண்டிக்க வேண்டும்.**

“இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்து சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு இந்திய அரசும் ஆதரவளிக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம்” என்கிறார் இலங்கை அமைச்சர். தங்களின் கொடூரத்துக்கு இந்திய அரசையும் பங்குதாரர் ஆக்கும் முயற்சி இது. இலங்கை அமைச்சரின் இந்தக் கூற்றை பா.ஜ.க. அரசு உடனடியாக மறுக்க வேண்டும். ‘இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக மீன் பிடிக்கவில்லை’ என்பதை பா.ஜ.க. அரசு உறுதி செய்து இலங்கை அரசுக்கு கடிதம் அனுப்ப வேண்டும். இன்னொரு நாட்டின் அமைச்சர், இந்திய மீனவர்கள் மீது அவதூறான, வஞ்சம் தீர்க்கும், பழி சொல்லும் குற்றச்சாட்டுகளை வைக்கும் போது அதனை மறுக்க வேண்டிய கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது.

**அதேபோல், கச்சத்தீவில் இந்தியாவின் உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிலைநாட்டும் முயற்சிகளைத் தொடங்க வேண்டும். ‘கச்சத்தீவை தாரை வார்த்து விட்டார்கள்’ என்று பொங்கிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. அரசு. அது உண்மையாக இருந்தால் இலங்கை அரசுடன் கச்சத்தீவு தொடர்பான பேச்சுவார்த்தையை பிரதமர் மோடி அவர்கள் தொடங்க வேண்டும்.**

“கச்சத்தீவை தாரை வார்த்துக் கொடுத்தது குறித்த புதிய உண்மைகள் வெளிப்பட்டு உள்ளன. இது ஒவ்வொரு இந்தியனையும் கோபப்படுத்தி இருக்கிறது” என்று பிரதமர் மோடி அவர்கள் 31.3.2024 அன்று சொன்னார்கள். அது அவரது உண்மையான கோபமாக இருந்தால், இப்போது இலங்கை அமைச்சர் சொன்னதும் அவரைக் கோபம் கொள்ள வைத்திருக்க வேண்டும்.

“அன்றைய ஆளும் கட்சியின் அலட்சியத்தால் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது. இதனால் ஏழை மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். அந்தக் கட்சிகள் மீனவர்களை வஞ்சிக்கிறது. மீனவர்களுக்காக அவர்கள் எதையும் செய்யவில்லை. மீனவர்களுக்கு அவர்கள் துரோகம் செய்துள்ளனர்” என்று கண்ணீர் வடித்தார் பிரதமர் மோடி. இதோ, அவருக்கு ஒரு வாய்ப்பு வந்துள்ளது. மீனவர்களுக்கு நன்மை செய்ய ஒரு வாய்ப்பு வந்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும்.

**“தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களுக்கும் கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும். இதனை கருத்தில் கொண்டு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்” என்று இந்த சட்டமன்றப் பேரவை வலியுறுத்துகிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்”** என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த முயற்சியை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்க வேண்டும்.

இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் பேச்சுக்கு இந்திய அரசு எதிர்வினை ஆற்ற வேண்டும். இந்திய மீனவர்கள் மீது குற்றம் சாட்டும் இலங்கை அமைச்சரை இந்திய அரசு கண்டிக்க வேண்டும். கச்சத்தீவின் இந்திய உரிமையை நிலைநாட்ட பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்.

**செய்யுமா ஒன்றிய பா.ஜ.க. அரசு?**



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் கழக அயலக அணி நிர்வாகிகள் நேரில் சந்தித்து வருகின்ற 8ஆம் தேதி சேலத்தில் நடைபெறவுள்ள கழக அயலக அணியின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்திற்கான அழைப்பிதழை வழங்கி வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக அயலக அணித் தலைவருமான டாக்டர். கலாநிதி வீராசாமி, அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, துணை அமைப்பாளர்கள் பரிதி இளம் சுருதி எம்.சி., புகழ்காந்தி, கன்னிகை ஸ்டாலின், திருமதி. உமாராணி, முத்துவேல் ராமசாமி, பாபு வினிபிரட் ஆகியோர் உடனிருந்தனர்.

### “இன்னுயிர் காப்போம்; நம்மைக் காக்கும் 48”

# உயிர் காக்கும் மகத்தான திட்டத்தின் 4 லட்சமாவது பயனாளி!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்!

சென்னை, ஜூலை.7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.07.2025) ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், “இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48” திட்டத்தில், 4 இலட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம்**

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் 2021 டிசம்பர் திங்கள் 18ஆம் தேதி மக்கள் நல்வாழ்வுத்துறையில் ஒரு புதிய திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். உலக அளவில் ஒரு புகழ் பெற்ற திட்டமாக இது பயன் பெற்று வருகிறது. சாலை விபத்துகளில் சிக்குபவர்களை உடனடியாக மீட்டு தமிழ்நாட்டில் உள்ள 250 அரசு மருத்துவமனைகள், 473 தனியார் மருத்துவமனைகள் என்று 723 மருத்துவமனைகளில் உடனடியாக சேர்த்து, சேர்க்கப்பட்ட முதல் 48 மணி நேரத்தில் ரூ.1 இலட்சம் அரசின் சார்பில் தந்து அவர்களுடைய உயிரை காப்பாற்றுவது என்கின்ற வகையிலான ஒரு மிகச் சிறந்த திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 ஆகும்.

முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த திட்டம் என்பது தமிழ்நாட்டில் ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட அடிக்கடி விபத்துகள் நேர்கின்ற மருத்துவமனைகளாக தேர்ந்தெடுத்து இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் படி, விபத்து நேர்ந்தவுடன், 8 நிமிடங்களுக்குள் ஆம்புலன்ஸ் இந்த இடத்திற்கு சென்றடைந்து, அவசர மருத்துவ தொழில்நுட்பவியர்களின் உதவியுடன் காயமுற்றவர்களின் உயிர்களை காப்பதற்குரிய முதலுதவிகளை செய்து மருத்துவ உதவிகளை ஆம்புலன்ஸ் வழங்கி உடனடியாக மருத்துவமனைகளில் சேர்க்கின்ற இந்த மகத்தான திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் மக்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன்பெற்று வருகிறது. இந்த திட்டத்தின் இன்னொரு சிறப்பு, தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி அண்டை மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும், வெளிநாடுகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஏதாவது ஒரு சாலையில் விபத்துகள் நேர்ந்தால், விபத்து நேர்ந்தவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து வந்து, முதல் 48 மணி நேரத்தில் அவர்களுக்குரிய முதலுதவிகளை செய்து அரசின் சார்பில் ரூ.1 இலட்சம் உதவியுடன் அவர்களது உயிரை காப்பது. அந்தவகையில் இந்த திட்டம் ரூ.1 இலட்சம் நிதியுதவியோடு, இந்த திட்டம் 3 ஆண்டு காலம் சிறப்பாக வழங்கப்பட்டு வந்தது, 24.12.2024 முதல் மாண்புமிகு தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.1 இலட்சம் என்பதை ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள். அந்த வகையில் தற்போது ரூ.2 இலட்சமாக வழங்கப்பட்டு வருகிறது.

**4 இலட்சமாவது பயனாளி**

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு இதுவரை 3,99,999 என்கின்ற வகையில் ஏறத்தாழ 4 இலட்சமாவது பயனாளி ஏசிஎஸ் மருத்துவக்கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர் பாரிவாக்கத்தைச் சேர்ந்த 33 வயது மணிகண்டன் என்கின்ற இளைஞர். தனியார் இருசக்கர வாகன விபத்தில் சிக்கி கால்கள் முறிந்த நிலையில் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, அவருக்கான மருத்துவ செலவை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது என்கின்ற செய்தியினை சொல்லியிருக்கிறோம். மேலும் 4,00,001, 4,00,002, 4,00,003 என்கின்ற பயனாளிகள் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மதுரவயால் பகுதியைச் சார்ந்த 50 வயது மதியழகன், புரசைவாக்கம் பகுதியைச் சார்ந்த 28 வயது சரண்யா, கோலப்பஞ்சேரி பகுதியைச் சார்ந்த 33 வயது விஸ்வநாதன் ஆகியோரும் வெவ்வேறு சாலை விபத்துகளில் குறிப்பாக இருசக்கர வாகன விபத்து, ஆட்டோ விபத்து என்று சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்கள் 4 பேரையும் தனித்தனியாக சந்தித்து அவர்களிடம் நலம் விசாரிக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி 101 சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட பிறகு 05.07.2025 வரை 3,99,952 பயனடைந்து இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு ஒட்டு மொத்தமாக செலவிட்டிருக்கும் தொகை ரூ.365.02 கோடி ஆகும். அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தவரை 3,69,785 பயனாளிகள் ரூ.313.06 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. தனியார் மருத்துவமனைகளைப் பொறுத்தவரை 30,167 பயனாளிகள் ரூ.51.95 கோடி செலவில் பயனடைந்திருக்கிறார்கள். அந்தவகையில் இந்த திட்டம் மிகச்சிறப்பாக சென்றுக் கொண்டிருக்கிறது.

காப்பீட்டுத் தொகை ரூ.1 இலட்சமாக இருந்தபோது, 3,26,246 பயனாளிகள் ரூ.285.13 கோடி செலவில் பயனடைந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதனை ரூ.2 இலட்சமாக உயர்த்திய பிறகு, 73,706 பயனாளிகள் ரூ.79.89 கோடி செலவில் பயனடைந்திருக்கிறார்கள். அந்தவகையில் இந்த திட்டத்தில் 4 இலட்சமாவது பயனாளியை இன்று ஏசிஎஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேரில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் சிறப்புகளை அறிந்த ஒன்றிய அரசு இதே போன்று ஒரு திட்டமான விபத்து நேர்ந்த 7 நாட்களுக்குள் ரூ.1.5 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இந்த திட்டத்தின் சிறப்பு இன்று இந்தியா முழுமைக்கும் ரூ.1.5 இலட்சம் பெற்று பயன்பெறுவதற்கு உறுதுணையாக இருந்த திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 எனும் திட்டம் ஆகும். தமிழ்நாட்டில் விபத்து நேர்ந்திருக்கிறது என்பதை உறுதி செய்த பிறகு அவர்களுக்கு உதவி செய்கிறோம். ஒன்றிய அரசு அறிவித்த திட்டத்தின்படி, காவல்துறை விசாரணை முடிந்து பிறகுதான் அவர்களுக்கு உதவித் தொகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சிறப்பு அலுவலர் மரு.தனவேல், முதல்வர் மரு. சீனிவாசாராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எச்.எம். ஜெய்னுதீன் தலைமையில்

# மலேசிய தளபதி பேரவை சார்பாக சாதனை விளக்கக் கூட்டம்!

## குடந்தை ராமகிருஷ்ணன் சிறப்புரை!

கோலாலம்பூர், ஜூலை 7-

மலேசிய தளபதி பேரவை சார்பாக நாடு போற்றும் நான்காம் ஆண்டு திராவிட மாடல் அரசு சாதனை விளக்க கூட்டம் காணொலியில் நடைபெற்றது.

இதில் தலைமைக் கழக பேச்சாளர் குடந்தை ராமகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.

மலேசியா தளபதி பேரவை செயலாளர் ஹச். எம்.ஜெய்னுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொருளாளர் சிவானந்தம், புருஷோத்தமன், பிலால் முகமது, நாகேந்திரன், வரகனேரி, அசாருதீன், சவுதி, ஆசிப் அலி சேட், அய்யனார், முருகானந்தம், தவ்பீக் ராஜா, தெய்வ நிதி, அருண் பாண்டியன், துபாய் செல்வம், சாதிக் பாட்ஷா, மணிகண்டன், திருமலைராஜபுரம் வினோத், வேல்முருகன் என்கின்ற அப்துல்லா,

தேவா என்கின்ற இர்பான், ஐஸ் அகமது, மகளிர் அணியை சார்ந்த ஷர்மிளா, ரேவதி, பார்வதி, ஹசீனா, நஜிமா பேகம், கதீஜா பீவி, ஒருங்கிணைப்பாளர் உமர்சா முகவை சக்திவேல், நசுருதீன், ஹர்ஷத் ரெஸ்டாரண்ட், தர்மராஜ், பழனி, அன்வர் மற்றும் ஏராளமான உடன்பிறப்புகள் காணொலியில் கலந்து கொண்டனர்.

நிறைவாக கனிமொழி நன்றி உரையாற்றினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.07.2025) ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ”இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டத்தில், 4 இலட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், ஏ.சி.எஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சிறப்பு அலுவலர் மரு.தனவேல், முதல்வர் மரு.சீனிவாசாராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.